## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண். C.C. No.522/2018**

2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 4 ம் தேதி திங்கட்கிழமை குற்றம் முறையிடுபவரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. தவமணி Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா.6**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : V.ஜெயக்குமார் | தொழில் | : சிறப்பு உதவி ஆய்வாளர் |
| தந்தை பெயர் | : வெங்கடேசன் | சமயம் | : |
| கிராமம் | : | சாதி | : |
| வட்டம் | : | வயது | : 51 |

**(1, 2 எதிரி ஆஜர். )**

**கு.வி.மு.ச.பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டு கூடுதல் சாட்சியாக விசாரணை செய்யப்படுகிறார்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் தற்போது அனந்தபுரம் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2015 ம் வருடம் எங்கள் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி திரு.மணிகண்டன்,என்பவர் இறந்துவிட்டதால், மேற்படி கோப்புகளின் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 28.05.2015 ம் தேதி எங்கள் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக திரு.மணிகண்டன் என்பவர் நிலையப்பொறுப்பில் இருந்தபோது அனந்தபுரத்தை சேர்ந்த ராமநாத செட்டியார் மகன் குமார் என்பவர் கொடுத்த புகார் மனு பெற்று அதனடிப்படையில் அனந்தபுரம் காவல் நிலையக்குற்ற எண்.84/2015 இதச பிரிவுகள் 294( b), 506(1), பிரிவு 4 TNPWH Act ..ன் பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்.

2. பின்னர் 28.05.2015 ம் தேதி மாலை 19.30 மணி அளவில் சம்பவம் இடம் சென்று சாட்சிகள் நேரு, சந்திரசேகர் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்.

3. பின்னர், இவ்வழக்கின் சாட்சிகளை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். அவரது விசாரணையில் சம்பவம் உண்மையென தெரியவர

எதிரியை தேட இவ்வழக்கின் 1, 2 எதிரிகளை 28.05.2015 தேதியன்று 20.20 மணிக்கு அனந்தபுரம் பேருந்து நிலையம் அருகே காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினார். பின்னர் அவரது விசாரணையை முடித்து இவ்வழக்கின் எதிரியின் முன்பே 294( b), 506(1), பிரிவு 4 TNPWH Act-ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தார். இவ்வழக்கின் பட்டியல் சாட்சி 3-நாராயணன், பட்டியல் சாட்சி -5 கோவிந்தசாமி, பட்டியல் சாட்சி-8 புலன் விசாரணை அதிகாரி மணிகண்டன் ஆகியோர்கள் இறந்துவிட்டார்கள்.

**(4. 28.05.2015 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4**
**5. 28.05.2015 தேதியிட்ட பார்வை மகசர் அ.சா.5**
**6. 28.05.2015 தேதியிட்ட வரைபடம் அ.சா.ஆ. 6**
**7. பட்டியல் சாட்சி 3 நாராயணன் இறப்பு சான்று நகல் அ.சா.ஆ 7**
**8. பட்டியல் சாட்சி 5 கோவிந்தசாமி இறப்பு சான்று நகல் அ.சா.ஆ 8**
**9. பட்டியல் சாட்சி 8 மணிகண்டன் இறப்பு சான்று நகல் அ.சா.ஆ 9**
**ஆக குறியிடு செய்யப்படுகிறது).**

**குறுக்குவிசாரணை:**

**6.** சம்பவம் நடந்த இடத்தில் புகார் கொடுத்த நபர் இல்லை என்றால் இல்லை. பின்னர் எதிரியை சென்று புகார் கொடுத்தவர் கேட்டபோது புகார் கொடுத்தவரை எதிரிகள் மிரட்டியுள்ளார்கள். புகார்தாரரை மிரட்டிய இடம் சம்பவ இடமா என்றால் இல்லை. குற்றச்சம்பவம் 2 இடத்தில் நடந்ததா என்றால் ஆமாம். புகாரிலும் 2 இடத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகாரில் சம்பவத்தை நேரடியாக பார்த்தது போன்று வாசகம் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ இடம் போக்குவரத்து நிறைந்த இடம் என்றால் சரிதான். வழக்குப்படி சம்பவம் உண்மையாக இருந்தால் பொதுமக்கள் அந்த சம்பவம் குறித்து போன் மூலமாக போலிசாருக்கு தகவல் கொடுக்க வாய்ப்புள்ளது என்றால் உள்ளது. சம்பவ இடத்தில் இருந்து அருகில் உள்ள காவல் நிலையத்திற்கு 5 நிமிடத்திற்குள்ளாக வந்து சேர முடியும் என்றால் வந்து சேர முடியும். வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களை சாட்சியாக இவ்வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். எவ்வளவு தொகைக்கு காய் வாங்கப்பட்டது மீதி தொகை எவ்வளவு என்று சம்மந்தமாக குறிப்பாக புகாரில் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. புலன் விசாரணை அதிகாரிதான் அவ்வாறு குறிப்பாக மீதி தொகை குறித்து கேட்டு பதிவு செய்தாரா என்றால் இல்லை. பாக்கி தொகை என்றுதான் விசாரைணையில் சொல்லியுள்ளார். ஆஜர் எதிரிகள் தங்களது சொந்தமான சித்திரசு கிராமத்திற்கு

செல்லவேண்டுமெனில் பிரச்சனை உள்ள காய்கறி கடைக்கு சற்று எதிரேயுள்ள பேருந்து நிறுத்தத்தில் இருக்கும் பஸ் மூலமாக போகமுடியும் என்றால் போகலாம். 20 அடி தூரத்தில் பஸ் நிறுத்தம் உள்ளது. காய்கறி கடையில் இருந்து பஸ் ஏறுவதற்கு அனந்தபுரம் பேருந்து நிறுத்தத்திற்கு செல்லாமல் எதிரே உள்ள பேருந்து நிறுத்தத்தில் செல்லும் பஸ்சில் செல்ல முடியும் என்றால் செல்லலாம். சம்பவம் 4.00 மணிக்கு நடந்ததாக குறிப்பிட்ட நிலையில் 6.30 மணிக்குத்தான் 2.30 மணி நேரம் காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலதாமதத்திற்கான விளக்கம் புகாரில் இல்லையென்றால் இல்லை. புகாரைப்பெற்ற பின்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய எவ்வளவு நேரம் ஆகும் என்றால் அரைமணி நேரம் ஆகலாம். எதிரி கைது செய்த இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் 1 1/2 கி.மீ. ஆகும். எப்போது கைது செய்தோம் என்றால் இரவு 8.20 க்கு கைது செய்தோம். 28.05.2015 ம் தேதியில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த 6.30 மணி முதல் இரவு 8.20 மணிக்குள் விசாரணை முழுவதையும் முடிக்கப்பட்டுவிட்டதா என்றால் ஆமாம். அன்றைய தினம் 8.20 மணிக்கு பிறகு அல்லது அடுத்த நாளோ விசாரணை மேற்கொண்டதற்கான சான்றுகள் அரசு தரப்பில் இல்லை என்றால் இல்லை. சம்பவத்தின்போது எதிரிகள் மது அருந்தி இருந்ததாக மருத்துவ பரிசோதனைக்குஉட்படுத்தி சான்றிதழ் இவ்வழக்கில் பெறப்படவில்லை என்றால் சரிதான். சம்பவம் 4.30 மணிக்கு நடந்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் கடைக்கு அருகில் உள்ள சாட்சிகளை அவசியமாக விசாரிக்க வேண்டிய நிலையில் அவர்களை இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியால் விசாரணை செய்யப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1 குமார் வழக்கமாக காவல் நிலையம், கலெக்டர் அலுவலகம் போன்றவற்றில் புகார் கொடுப்பதை வழக்கமாக கொண்டவர் என்றால் அதுபற்றி தெரியவில்லை. சம்பவத்தின்போது கேட்காத பொருட்களை கொடுத்து அதிக பணம் கேட்டதனால் அ.சா.2 சாட்சிதான் எதிரிகளின் ஜாதி பெயரை சொல்லி தவறாக பேசியுள்ளார் என்றால் சரியல்ல. அது சம்மந்தமாக அ.சா.2 சாட்சிக்கு எதிராக எதிரிகள் புகார் கொடுத்து விடுவார்கள் என்று பயந்து அ.சா.1 -ஆல் எதிரிகளுக்கு எதிராக பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவம் உண்மையாக இருந்தால் 100 க்கு போன் செய்து தெரிவித்திருக்கலாம் என்றால் சம்பவம் உண்மை. அ.சா.1 க்கு வேண்டியவர்கள் தான் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளள்ப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.